**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**MCOP No. 82/2024**

**நாள்.21.11.2025**

ம.சா.1 திருமதி.சிவரஞ்சனி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தாயார் கடல் தொழில் மற்றும் மீன்வியாபாரம் மூலம் மாதம் ரூ.30,000/- சம்பாதித்தார் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனமான TN 45 CY 5983 லாரியை Alto Car என்று சொல்லி 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்து ஏமாற்றியுள்ளார் என்பதால், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர தேவையில்லை என்றும் சொல்வது சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரரின் வாகனமான TN 45 CY 5983 லாரியை ஓட்டிவந்த ஓட்டுநர்தான் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டிவந்து சாலைவிதிகளை கடைபிடிக்காமல் விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதி அறிக்கையும் அவர்மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பெற்றோர் பயணம் செய்த TN 65 BZ 3188 டாடா ஏஸ் வாகன ஓட்டுநர் மீது தவறு எதுவும் இல்லை என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரரை சம்பிரதாய தரப்பினராகத்தான் இந்த வழக்கில்

சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றாலும், 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க அவசியம் இல்லை என்றாலும் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் பல்வேறு இனங்களில் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .